மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 05 வெள்ளிக்கிழமை 21.11.2025 கதிர் 377






# மாவீரர் வாரம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், நவ. 21

தேச விடுதலைக்காகப் போராடி மடிந்த வீரமறவர்களை நினைவுகூரும் தமிழ்த் தேசிய மாவீரர் வாரத்தின் ஆரம்ப நாள் நிகழ்வு இன்று வேலணை சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் நடைபெற்றது.

சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தின் தீவக நினைவேந்தல் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு ஈகச் சுடரேற்றப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதேவேளை, நாளை காலை 9.30 மணியளவில் தீவகத்தில் வாழும் மாவீரர்களின் உறவுகள், 7➤

# அரசாங்கத்தை எதிர்த்து நுகேகொடையில் இன்று திரண்ட எதிர்க்கட்சியினர்



கொழும்பு, நவ. 21

தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் இணைந்து ஏற்பாடு செய்த பேரணி இன்று பிற்பகல் 2 மணி முதல் நுகேகொடையில் நடைபெற்று வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பிவிதுரு ஹெல உறுமய, ஸ்ரீலங்கா மகாஜன கட்சி, ஜனதா சேவக கட்சி, நவ ஜனதா பெரமுன உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் இந்த அரச எதிர்ப்புப் பேரணியில் பங்கேற்றுள்ளன.

தேசிய மக்கள் சக்தி அரசு ஆட்சிக்கு வந்து ஓராண்டு கடந்துள்ள நிலையில், நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு வலியுறுத்தியே இந்தப் பேரணி நடைபெறுகின்றது என்று ஏற்பாட்டாளர்கள் விளக்கமளித்துள்ளனர்.

அத்துடன், அரசின் ஜனநாயக விரோதச் செயல், அடக்குமுறை என்பவற்றுக்கு எதிராகவும் இந்தப் பேரணி இடம்பெறுகின்றது என்றும் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

சில எதிர்க்கட்சிகள் கூட்டிணைந்து 'மாபெரும் மக்கள் குரல்' என்ற தொனிப்பொருளின் கீழ் அரசுக்கு எதிராகப் பேரணியை நடத்தினாலும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இதில் பங்கேற்கவில்லை. நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியும் இதில் கலந்துகொள்ளவில்லை. மலையகத்திலுள்ள பிரதான இரு கட்சிகளான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் தமிழ் முற்போக்குக் கூட்டணியும் இந்தப் பேரணியில் பங்கேற்கவில்லை.

விமல் வீரசன்ச, சம்பிக்க ரணவக்க, திலீத் ஜயவீர ஆகியோர் தலைமைப் பதவி வகிக்கும் கட்சிகளும் அரசுக்கு எதிரான இந்தப் பேரணியில் பங்கேற்கவில்லை

## நுகேகொடைப் பேரணியில் நாமல் புராணம் பாடிய சாமர



கொழும்பு, நவ. 21

அடுத்து எங்கள் ஆட்சிதான் மலரும் என்பதற்கான ஆரம்ப கட்ட சமிக்ஞையே இந்தக் கூட்டமாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க தெரிவித்தார்.

நுகேகொடையில் இன்று நடைபெற்று வரும் அரசுக்கு எதிரான பேரணியில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், 7➤

## சஜித் அணிக்கு ஹரின் அழைப்பு




கொழும்பு, நவ. 21

எதிரணியினரின் அரசுக்கு எதிரான அடுத்த பேரணியில் ஐக்கிய மக்கள் சக்தி பங்கேற்க வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோ அழைப்பு விடுத்தார்.

நுகேகொடையில் இன்று நடைபெற்று வரும் அரசுக்கு 7➤





## கொழும்பில் மாவீரர்களுக்கு ரவிகரன் எம்.பி. அஞ்சலி!

கொழும்பு, நவ. 21

மாவீரர் வாரம் இன்று ஆரம்பித்துள்ள நிலையில் தாயகத்திலும், புலம்பெயர் தேசங்களிலும் மாவீரர்களுக்கான அஞ்சலி நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


அந்தவகையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மாவீரர் வாரத்தின் முதல் நாளில் இலங்கைத் தலைநகர் கொழும்பில் மாவீரர்களுக்கு உணர்வுபூர்வமாகத் தனது அஞ்சலிகளைச் செலுத்தினார்.

அந்தவகையில் மாவீரர் துயிலும் இல்லத்தைத் தாங்கிய திருவுருவப் படத்துக்குச் சுடரேற்றி, மலர் தூவி மாவீரர்களுக்கு உணர்வுபூர்வமாக 7➤

# கைதான SJB முன்னாள் உறுப்பினரின் கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தம்

கொழும்பு, நவ.21

போதைப்பொருள் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பன்னல பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சக்தி யின் முன்னாள் உறுப்பினரின் கட்சி உறுப்புரிமை உடனடியாக நடை முறைக்கு வரும் வகையில் இடை நிறுத்தப்பட்டுள்ளது.



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது 'ஒ' கணக்கில் பதிவொன்றை இட்டு இதை உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்காக கட்சி தனியான விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தனது ஒ பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

தென் கடற்பகுதியில் நேற்று (20) போதைப் பொருட்களுடன் மீன்பிடிப் படகு ஒன்றை கடற்படையினர் கைப்பற்றிய சம்பவம் தொடர்பில், ஒருவரை பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் கைது செய்திருந்தனர்.

இது தொடர்பில் வினவியபோது, கைது செய்யப்பட்டவர் பன்னல பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் உறுப்பினர் என பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை கடற்படையினால் குறித்த நெடுநாள் மீன்பிடிப் படகும் அதில் இருந்த 6 மீனவர்களும் நேற்று மாலை தங்காலை மீன்பிடித் துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

பாதுகாப்புப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், இலங்கை கடற்படை மற்றும் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவினர் இணைந்து மேற்கொண்ட கூட்டு நடவடிக்கையின் போதே இந்தப் படகு கண்டுபிடிக்கப்பட்டது.

அந்தப் படகில் இருந்து 5 பைகளில் 100 பொதிகளாக அடைக்கப்பட்டிருந்த 115 கிலோவுக்கும் அதிகமான ஹெரோயின் மற்றும் 13 பைகளில் 200 பொதிகளாக அடைக்கப்பட்டிருந்த 261 கிலோவுக்கும் அதிகமான ஐஸ் போதைப் பொருளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (ஐ)

# யுக்திய நடவடிக்கையால் மனித உரிமை மீறல் – நட்டஈட்டு மனுவிற்கு அனுமதி

கொழும்பு, நவ.21

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் யுக்திய நடவடிக்கை முன்னெடுக்கப்பட்ட போது, எந்தவொரு நியாயமான காரணமும் இன்றி கிராண்ட்பாஸ் பொலிஸாரால் தம்மை கைது செய்து, போதைப்பொருள் வைத்திருந்ததாகக் குற்றம்சாட்டி விளக்கமறியலில் வைத்ததன் மூலம் தமது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டதாக 10 கோடி ரூபாய் நட்டஈடு கோரி தந்தை மற்றும் மகன் ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள உயர் நீதிமன்றம் நேற்று (20) அனுமதி வழங்கியது.

இந்த மனுவை கிராண்ட்பாஸ் பிரதேசத்தைச் சேர்ந்த வர்த்தகர்களான தந்தையும் மகனுமான மொஹமட் சுலைமான் மற்றும் இஃப்தான் ரஹ்மத்துல்லா ஆகியோர் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனு தொடர்பாக ஆரம்ப கட்டத்தில் தகவல்களை உறுதிசெய்த பின்னர், நீதியரசர்களான யசந்த கோதாகொட, சோபித ராஜகருணா மற்றும் மேனகா விஜேசுந்தர ஆகியோர் அடங்கிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

மனுதாரர்கள் குறிப்பிடுகையில், யுக்திய நடவடிக்கை அமுலில் இருந்த கடந்த வருடம் மார்ச் மாதம் 14ஆம் திகதி, தாம் வசித்த அடுக்குமாடிக் குடியிருப்புக்கு வந்து சோதனையிட்டு, தம்மைத் தாக்கி, கைதுசெய்து பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

பின்னர், போதைப்பொருள் வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டி, தம்மை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விளக்கமறியலில் வைத்ததாகவும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

அதன் பிறகு, நீதிமன்றத்தால் தாம் பிணையில் விடுவிக்கப்பட்டு, பின்னர் குற்றச்சாட்டுகளில் இருந்து விடுவிக்கப்பட்டதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பிரதிவாதிகளின் இந்த நடவடிக்கையால் தமது அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாகத் தீர்ப்பளிக்குமாறும், அதற்காக ரூபா 10 கோடி நட்டஈடு வழங்குமாறு உத்தரவிடுமாறும் மனுதாரர்கள் மேலதிகமாக உயர் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா ஆஜரானார்.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பிவீட) எல்டிடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# அரகலய போராட்டத்தை ஜனநாயக ரீதியிலேயே கட்டுப்படுத்தினோம்

கொழும்பு, நவ.21

நாட்டில் இடம்பெற்ற அரகலய போராட்டத்தை ஜனநாயக ரீதியில் கட்டுப்படுத்தியதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தகைய போராட்டங்களுக்கு சர்வதேச சக்திகளின் ஆதரவு இருந்தாலும் இல்லாவிட்டாலும், அதற்குப் பணியாமல் செயற்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

"நாங்கள் எல்லாவற்றையும் நடைமுறைப்படுத்தியதால், எங்களால் இந்த நாட்டில் ஜனநாயகத்தைப் பாதுகாக்க முடிந்தது.

பங்களாதேஷிலும் ஒரு பிரச்சினை ஏற்பட்டது. அங்கு வீதிக்கு இறங்கியவர்கள் மீது கடைசியில் அரசாங்கம் சுட வேண்டியதாயிற்று.

எங்களுக்கு ஏற்பட்ட அளவு கடுமையான பிரச்சினை அவர்களுக்கு இல்லை. நேபாளத்தில் சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவது பற்றிப் பாருங்கள்.

அங்குதான் பிரச்சினை தொடங்கியது. எங்களுக்கு இருந்தவை இவற்றைவிடக் கடுமையான பிரச்சினைகள். எவ்வாறாயினும், ஜனநாயகத்தின் ஊடாக அதைப் பாதுகாக்க நாங்கள் செயற்பட்டோம். எங்களால் அதைக்



செய்ய முடிந்தது.

போராட்டம் ஒடுக்கப்பட்டது என்று பிபிசி, அல்-ஜசீரா என எல்லா இடங்களிலும் கூறினார்கள்.

எவ்வளவு ஒடுக்கினார்கள் என்றால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் நான் தோற்றேன்.

உலகிலேயே இப்படிப்பட்ட வெற்றிகரமான ஒடுக்குமுறை எங்கேயும் நடந்திருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

நாம் செல்ல வேண்டிய பாதையை நாமே உருவாக்கிக் கொள்ள வேண்டும். வெளியிலிருந்து சொல்வது போல் இவற்றைச் செய்ய முடியாது.

இப்போது மேலும் ஒரு கேள்வி எழுந்துள்ளது – எமது பிராந்தியமான ஆசியாவில் இந்தப் போராட்டங்களுக்குப் பின்னால் சக்திகள் இருக்கின்றனவா என்று. நாம் எதற்கும் அடிபணியாமல், இந்தப் பிரச்சினையை நாமே தீர்த்துக்கொள்ள முடிந்தது." என்றார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க,

"பொருளாதாரத்தையும் சீர் செய்தோம். நாட்டில் கோரிக்கைகள் இருந்தன -கோல்ஃபேஸ் மைதானத்தில், போராட்டத்தில், நாடு முழுவதும் உரத்தைக் கொடுங்கள், உணவு கொடுங்கள், எரிபொருள் கொடுங்கள் என்று கேட்டார்கள்.

அந்த மூன்று தேவைகளையும் பூர்த்தி செய்தோம். ஜனநாயகத்தைப் பாதுகாக்கச் சொன்னார்கள், அதையும் செய்தோம். ஊழலை ஒழிக்கச் சொன்னார்கள். ஊழல் எதிர்ப்புச் சட்டத்தை நிறைவேற்றினோம்.

ஒன்றை நினைவில் கொள்ளுங்கள், ஆசியாவிலேயே பழமையான ஜனநாயக நாடுகளில் ஒன்றுதான் இலங்கை.

நாம் இதைப் போற்ற வேண்டும். இதைப் பாதுகாக்க வேண்டும். இதை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும்.

இது எந்தவொரு அரசாங்கத்தினதும் கடமையாகும். அதைச் செய்ய முடியாவிட்டால், எங்களால் ஆட்சி செய்ய முடியும் என்று எந்தவொரு அரசாங்கமும் சொல்ல முடியாது." என்றார். (ஐ)



## வெள்ளத்தால் துரைவந்தியமேடு கிராமத்திற்கான போக்குவரத்து முற்றாக தடை

கிட்டங்கி வீதியை ஊடறுக்கும் மழை வெள்ளம் காரணமாக துரைவந்தியமேடு கிராமத்தின் தொடர்பு முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளதுடன் இராணுவத்தினர் இரவு கடமையில் அப்பகுதியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிட்டங்கி வீதி அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள நீர் பரவல் காரணமாக அப்பகுதியால் பயணம் செய்பவர்கள் பாதுகாப்பு அறிவுறுத்தல் பின்பற்றி செல்வதை அவதானிக்க முடிகின்றது. கல்முனை மாநகரையும் நாவிதன்வெளி பெரு நிலப்பரப்பையும் இணைக்கும் கிட்டங்கி தாம்போதிக்கு மேலாக வெள்ளம் பாய்வதால் இன்று போக்குவரத்து கட்டுப்பாட்டுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்தில் இடையிடையே பெய்யும் மழை காரணமாக பல்வேறு பகுதிகளிலும் வெள்ள நிலைமை ஏற்பட்டுள்ளது.

கல்முனை நாவிதன்வெளி பகுதியை இணைக்கின்ற கிட்டங்கி வீதியால் நீர் பாய்வதால் துரவந்திய மேடு கிராமத்துக்கு செல்வதற்கான பாதைகள் மூடப்பட்டு கிராமம் தனிமைப்படுத்தப்பட்டுள்ள நிலை உருவாகியுள்ளது. இதே வேளை இவ் வீதியில் ஆற்றுவாழைகள் பரவியிருப்பதால் போக்குவரத்துக்கு பாரிய இடையூறு ஏற்பட்டிருந்தது.

இவ் ஆற்றுவாழைகளை அகற்றும் நடவடிக்கை கல்முனை மாநகர சபை முன்னெடுத்துள்ளதுடன் நாவிதன்வெளி பிரதேச செயலகம் பிரதேச சபை என்பன பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இது தவிர சவளக்கடை கல்முனை பொலிஸார் போக்குவரத்தினை சீர் செய்யும்நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதையடுத்து இப்பாதை ஊடான போக்குவரத்துகள் சுமுகமாக இடம்பெற்று வருகிறது. (ஐ)

## நுகேகொடை போராட்டம் உயர்தர மாணவர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டால் நடவடிக்கை! பொலிஸார் எச்சரிக்கை

நுகேகொடையில் இன்று நடைபெறவிருக்கும் எதிர்க்கட்சிகளின் பேரணியின் ஏற்பாட்டாளர்கள், அந்தப் பகுதியில் அமைந்துள்ள உயர்தரப் பரீட்சை மையங்களுக்கு இடையூறு விளைவிக்காமையை உறுதி செய்யுமாறு பொலிஸார் வலியுறுத்தியுள்ளனர்.

நுகேகொடையில் உள்ள அனுலா வித்யாலயா, செயிண்ட் ஜான்ஸ் கல்லூரி, செயிண்ட் ஜோசப் பெண்கள் பாடசாலை மற்றும் சமுத்திரதேவி பாலிகா வித்யாலயா உள்ளிட்ட பல பாடசாலைகள், 2025 உயர்தர அரசியல் அறிவியல் வினாத்தாளுக்கான தேர்வுமையங்களாக செயல்பட்டு வருகின்றன.

எனவே, தற்போது நடைபெற்று வரும் தேர்வை பாதிக்கக்கூடிய சத்தம், நெரிசல் அல்லது இடையூறுகளைத் தவிர்க்கும் வகையில் நிகழ்வை நடத்துமாறு பேரணி ஏற்பாட்டாளர்களுக்கு அதிகாரிகள் அறிவித்துள்ளனர். மேலும், தேர்வு சூழலைப் பாதுகாக்கவும், மாணவர்கள் சிரமத்திற்கு ஆளாகாமல் இருப்பதை உறுதி செய்யவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)


## நாடு முழுவதும் திரிபோசாவுக்கு கடுமையான பற்றாக்குறை

நாடு முழுவதும் உள்ள பல மகப்பேறு மற்றும் சிறுவர் வைத்தியசாலைகளில் திரிபோசாவுக்கு கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் மருத்துவ தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் மருத்துவர் சமல் சஞ்சீவ இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது நிலவும் இந்தத் தட்டுப்பாடு காரணமாக, திரிபோசா குறிப்பிட்ட சில பிரிவினருக்கே வழங்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அதன்படி தற்போது மூன்று வயதுக்கு மேற்பட்ட மிகக் கடுமையான போஷாக்குக் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு, அத்துடன் இரும்புச் சத்து குறைபாடுள்ள தாய்மார்கள் மற்றும் குறைந்த எடையுள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு மட்டுமே திரிபோஷா வழங்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.




கடந்த பல வருடங்களாக மூன்று வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு திரிபோசா வழங்கப்படவில்லை என்றும், இந்தத் திட்டம் மீண்டும் தொடங்கப்படும் என அதிகாரிகள் அறிவித்த போதிலும், இதுவரை அரசாங்கம் அதனை நடைமுறைப்படுத்தத் தவறிவிட்டதாகவும் வைத்தியர் சஞ்சீவ தெரிவித்தார். (ஐ)

## வீதி விபத்தில் வயோதிபர் மரணம்

வீதியைக் கடக்க முற்பட்ட பாதசாரி மீது ஓட்டோ மோதியதில் மேற்படி பாதசாரி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கெஸ்பாவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெஸ்பாவ - பண்டாரகம வீதியில் ஆயுர்வேத சந்திக்கு அருகில் நேற்று இடம்பெற்றுள்ளது.

கெஸ்பாவவில் இருந்து பண்டாரகம நோக்கிச் சென்ற ஓட்டோ, வீதியைக் கடக்க முற்பட்ட பாதசாரி மீது மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த பாதசாரி களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மடபாத்த பகுதியைச் சேர்ந்த 72 வயதுடைய வயோதிபரே உயிரிழந்துள்ளார்.

சடலம் களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடைய ஓட்டோவின் சாரதியும் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காகப் பிலியந்தலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பில் கெஸ்பாவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வாகன விபத்தில் பெண் ஒருவர் பலி

### நால்வர் வைத்தியசாலையில்

கொழும்பு, நவ. 21

ரிகில்கஸ்கட, கட்டுகஸ்ஹின்ன பகுதியில் இன்று காலை இடம்பெற்ற கோர விபத்தில் பெண் ஒருவர் பலியாகியுள்ளார். மேலும் நால்வர் காயமடைந்துள்ளனர்.

பஸ் ஒன்றும், ஓட்டோ ஒன்றும் மோதுண்டதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர்கள் ரிகில்கஸ்கட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் கண்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். ஓட்டோவில் பயணித்தவர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர். பெண் ஒருவரும், இரண்டு ஆண்களும், 7 வயதான சிறுவனுமே காயமடைந்துள்ளனர். விபத்து தொடர்பில் பொலிஸ் விசாரணை இடம்பெற்று வருகின்றது.

# மாநில உரிமைகளுக்கான போராட்டம் தொடரும்: முதல்வர் ஸ்டாலின்

மாநில உரிமைகள் மற்றும் கூட்டாட்சிக்கான எங்கள் போராட்டம் தொடரும் என முதல்வர் ஸ்டாலின் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை: மாநில உரிமைகளையும், உண்மையான கூட்டாட்சியையும் நிலைநாட்டும் நமது போராட்டம் தொடரும். சட்டமுன்வடிவுகள் மீது முடிவெடுக்க கவர்னர்களுக்கு காலக்கெடு விதிக்கும் வகையில் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படும் வரை நாம் ஓயமாட்டோம். ஜனாதிபதியின் கேள்விகளுக்கு சுப்ரீம்கோர்ட் அளித்துள்ள விளக்கங்கள்

கவர்னருக்கு எதிராகத் தமிழக அரசு தொடர்ந்த வழக்கில், ஏப்ரல் 8ம் தேதி பெற்ற தீர்ப்பின் மீது எந்தத் தாக்கத்தையும் செலுத்தாது. சொல்லப் போனால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுதான் ஆட்சியைச் செலுத்த வேண்டும், மாநிலத்தில் இரண்டு அதிகார மையங்கள் இருக்க முடியாது.

அரசியலமைப்புச் சட்டத்தின் சட்டகத்துக்குட்பட்டே அரசியலமைப்புப்பதவியில் இருப்போர் செயல்பட வேண்டுமே ஒழிய, அரசியலமைப்பை மீறிச் செயல்படலாகாது. சட்டமுன்வரைவுக்கு ஒப்புதல் மறுப்பது ஃ (தமிழக கவர்னர் செய்தது போல) காலவரையின்றி ஒப்புதல் வழங்காமல் நிறுத்தி வைப்பது எனும் நான்காவது விருப்பத் தேர்வு கவர்னர்களுக்கு இல்லை. மசோதாக்களின்மீது முடிவெடுக்காமல் காலவரையின்றி கவர்னர் தாமதம்



செய்ய இயலாது.

அப்படி, எந்த விளக்கமும் இல்லாமல் நீண்டகாலம் இழுத்தடித்தால், மாநிலங்கள் நீதிமன்றங்களை அணுகலாம். ஆளுநர்கள் வேண்டுமென்றே தாமதிப்பதற்கு எதிராக வழக்கு தொடுத்து, கேள்விக்குட்படுத்தி நியாயம் பெறலாம் என்பனவற்றைத் தனது விளக்கத்தில் சுப்ரீம்கோர்ட் அமர்வு மீண்டுமொருமுறை உறுதிப்படுத்தியுள்ளது. தமிழக கவர்னர் உட்பட மாநில அரசுகளுடன் மல்லுக்கட்டும் அனைத்து கவர்னர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளின் வழியில் செயல்பட வேண்டும் என்பதையும், மக்களின் விருப்பத்தைச் சட்டமியற்றி நிறைவேற்றும்போது, வேண்டுமென்றே ஒப்புதல் அளிக்காமல் காலத்தைக் கடத்தினால் நீதிமன்றங்களில் அதற்குப் பதில் சொல்லியாக வேண்டுமென்பதையும் நமது சட்டப் போராட்டத்தின் மூலம் கட்டாயமாக்கியுள்ளோம்.

அரசியல்சட்டப்பிரிவு 361-க்குப் பின்னால் கவர்னர்கள் ஒளிந்துகொள்ள முடியாது என்பதையும் உறுதிப்படுத்தி உள்ளோம். அரசியல் சட்டத்தால் அமையப்பெற்ற எந்தப் பதவியும் அச்சட்டத்துக்கு அப்பாற்பட்டதில்லை என நான் திடமாக நம்புகிறேன். உயர்ந்த அரசியலமைப்புப் பதவிகளில் இருப்போரே அரசியலமைப்புச் சட்டத்தை மீறி நடந்தாலும், நீதிமன்றங்கள்தான் ஒரே நம்பிக்கை. ஆகவே, நீதிமன்றங்களின் கதவு தீர்வுபெறத் திறந்தே இருக்க வேண்டும். அது தனது கதவுகளை அடைத்தால், நமது அரசியலமைப்பின்படியான மக்களாட்சியில் சட்டத்தின் ஆட்சியைச் சிறுமைப்படுத்திவிடும்.

அரசியல் உள்நோக்கத்தோடு செயல்படும் கவர்னர்கள் அரசியலமைப்புச் சட்டத்துக்குப் புறம்பாக நடந்துகொள்வதை ஊக்குவிக்கும். தமிழக மக்களின் விருப்பத்தைச் சட்டங்களின்மூலம் நிறைவேற்ற, அரசியலமைப்புச் சட்டத்துக்குட்பட்டு அரசியலமைப்புக்கருவிகள் செயல்படுவதை உறுதிசெய்யத் தொடர்ந்து உழைப்போம். எங்கள் வாக்கைக் காப்பாற்றுவோம். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார். (ஐ)

## மனைவியுடன் தாஜ்மஹாலை ரசித்தார் அமெரிக்க அதிபர் டிரம்ப் மகன்



டில்லி வந்துள்ள அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்பின் மகனும், தொழிலதிபருமான டொனால்டு டிரம்ப் ஜூனியர், 47 தன் மனைவியுடன் நேற்று ஆக்ராவில் உள்ள தாஜ் மஹாலை சுற்றிப் பார்த்தார்.

ராஜஸ்தான் மாநிலம் உதய்ப்பூரில், அமெரிக்கா வாழ் இந்திய வம்சாவளி கோடீஸ்வரர்களான வம்சி கதிராஜு மற்றும் நேத்ரா மன்தேனா ஜோடியின் திருமண விழா இன்று துவங்கி 24ம் தேதி வரை நடக்க உள்ளது.

'டெஸ்டினேஷன் வெட்டிங்' எனப்படும், உலக பாரம்பரியம் மிக்க இடங்கள் மற்றும் பிரபலமான சுற்றுலா தலங்களில் இந்த திருமணம் நடக்கிறது. இந்த திருமண விழாவில் அமெரிக்க அதிபர் டிரம்ப் மகன் டிரம்ப் ஜூனியர், உலக புகழ்பெற்ற பாடகர்களான ஜெனிபர் லோபஸ், ஜஸ்டின் பைபர் மற்றும் பாலிவுட் நட்சத்திரங்கள், அரசியல்வாதிகள் பங்கேற்கின்றனர்.

இதற்காக மத்திய மற்றும் மாநில போலீசாரின் கண்காணிப்பு வளையத்துக்குள் உதய்பூர் கொண்டு வரப்பட்டுள்ளது. திருமணம் நடக்க உள்ள ஜக்மந்திர் அரண்மனை, பிரபலங்கள் தங்கி உள்ள லீலா பேலஸ் ஹோட்டல் ஆகியவற்றுக்கு பல அடுக்கு பாதுகாப்பு போடப் பட்டுள்ளது.

உதய்ப்பூர் செல்வதற்கு முன் டிரம்பின் மகன் டிரம்ப் ஜூனியர், உ.பி.,யின் ஆக்ராவுக்கு வந்தார். அங்கு உள்ள ஓபராய் அமர் விலாஸ் ஆடம்பர ஐந்து நட்சத்திர விடுதியில் தங்கி, தாஜ் மஹாலை தன் மனைவி வானெசா டிரம்புடன் சுற்றி பார்த்தார்.

தாஜ் மஹால் முன் அமைக்கப்பட்டிருக்கும் டயானா பெஞ்ச் மீது ஜோடியாக அமர்ந்து அவர்கள் புகைப்படம் எடுத்துக்கொண்டனர். (ஐ)



## கொள்ளையடித்ததை பாதுகாக்க பா.ஜ.,வுடன் பழனிசாமி கூட்டணி: செந்தில்பாலாஜி தாக்கு

"அ.தி.மு.க., ஆட்சியில் கொள்ளையடித்த சொத்துக்களை பாதுகாக்கவே, பா.ஜ.,வுடன் அ.தி.மு.க., பொது செயலாளர் பழனிசாமி கூட்டணி அமைத்திருக்கிறார்," என, முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி கூறினார்.

கோவை, மதுரைக்கான மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு அனுமதி கோரி, திட்ட அறிக்கை சமர்ப்பித்து, 15 மாதமாகி விட்டது. தமிழகத்துக்கு மட்டும் அற்ப காரணங்கள் கூறி, நிராகரித்திருக்கின்றனர்.

கடந்த 2011 மக்கள் தொகையை சொல்கிறார்கள் 14 ஆண்டுகள் மக்கள் தொகை வளர்ச்சியை கணக்கில் கொள்ளாமல் குறுகிய மனப்பான்மையோடு செயல்பட்டு இருக்கிறது.

இந்தியாவில் எந்த மாநிலங்களில் மெட்ரோவுக்கு விரிவான அறிக்கை அனுப்பப்பட்டு நிராகரிக்கப்பட்டுள்ளது. இங்கு மட்டும் நிராகரிக்கப்பட்டதன் நோக்கம் தமிழகம் வளர்ந்து விடக்கூடாது என்ற குறுகிய மனப்பான்மையே காரணம்.

கடந்த லோக்சபா தேர்தலில், அவர்கள் கணக்கு ஜீரோவாக இருந்தது. இதே கணக்கு சட்டசபை தேர்தலிலும் இருக்கும். இது, அ.தி.மு.க.,வுக்கும் பொருந்தும். அ.தி.மு.க., ஆட்சியில் கொள்ளையடித்த சொத்துக்களை பாதுகாக்கவே பா.ஜ.வுடன் அ.தி.மு.க., பொது செய லாளர் பழனிசாமி கூட்டணி அமைத்திருக்கிறார். இவ்வாறு, அவர் கூறினார். (ஐ)

# வெளியாகும் பதிவுக்கு சமூக ஊடக தளங்கள் பொறுப்பு ஏற்க வேண்டும்: அஸ்வினி வைஷ்ணவ்



"பயனர்கள் வெளியிடும் பதிவுகளுக்கு சமூக ஊடக தளங்கள் பொறுப்பு ஏற்க வேண்டும்" என மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

சிங்கப்பூரில் நடந்த ப்ளூம்பெர்க் புதிய பொருளாதார மன்றத்தில் அஸ்வினி வைஷ்ணவ் பேசியதாவது: சமூக ஊடக தளங்கள் தாங்கள் செயல்படும் நாட்டின் சமூக கட்டமைப்பைப் புரிந்துகொண்டு, அந்நாட்டின் சட்டங்களை மதித்து நடக்க வேண்டும். சமூக ஊடக நிறுவனங்களுக்கும், சமூகத்திற்கும் இடையிலான நம்பிக்கை குறைந்து வருவதால், அனைவரும் கவலைப்படுகிறார்கள்.

போலியான, தகவல்கள், பெருகும் வதந்திகள் காரணமாக நம்பிக்கை முற்றிலும் உடைந்து வருகிறது. போலி மற்றும் செயற்கை நுண்ணறிவை பயன்படுத்தி உருவாக்கப்படும் பதிவுகள் மக்கள் மத்தியில் நம்பிக்கையின்மையை ஏற்படுத்தி வருகின்றன. எனவே பயனர்கள் வெளியிடும் பதிவுகளுக்கு சமூக ஊடக தளங்கள் பொறுப்பு ஏற்க வேண்டும்.

தொழில்நுட்பம் மிக விரைவாக மாறிக் கொண்டிருக்கிறது என்பதை நாங்கள் அறிவோம். இதுபோன்ற சூழ்நிலைகளில், அனைத்து விவகாரங்களுக்கும் ஏற்ற ஒரு சட்டத்தை நீங்கள் கொண்டிருக்க முடியாது. எனவே மக்களுக்கு வழிகாட்டுதலை உருவாக்கும்போது அதை சமூக ஊடக தளங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

இல்லையெனில் கடுமையான விதிமுறைகளை பின்பற்ற வேண்டியிருக்கும். இவ்வாறு அஸ்வினி வைஷ்ணவ் பேசினார். (ஐ)



# புத்திசாலி குழந்தையை உருவாக்குவோம்

குழந்தை வளர்ப்பு என்பது சந்தோஷத்துடன் கூடிய ஒரு சவாலான பயணம். ஒவ்வொரு பெற்றோரின் லட்சியமும் புத்திசாலித்தனம், திறமையோடு, நற்குணங்களையும் கொண்ட குழந்தைகளை வளர்க்க வேண்டும் என்பதுதான். இந்த வழிகாட்டி உன்னதமான இலக்குகளை அடைவதற்கான ஒருவரைபடத்தை வழங்குகிறது. குழந்தைப் பருவ வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் வளர்ப்புச் சூழலில் பெற்றோரின் முக்கிய பங்கை வலியுறுத்துகிறது.

### ஆரம்ப ஆண்டுகளில் மூளை வளர்ச்சி

குழந்தையின் முதல் ஐந்து ஆண்டுகளில் மூளை வேகமாக வளர்ச்சியடைகிறது. சுமார் இரண்டு வயதில் இந்த வளர்ச்சி உச்சத்தை அடைகிறது. எதிர்கால அறிவாற்றல், உணர்வுகள் மற்றும் சமூக வளர்ச்சிக்கான அடித்தளத்தை அமைப்பதால் இந்தக் காலம் முக்கியமானது. ஐந்து வயதுக்குள் மூளையின் வளர்ச்சி கிட்டத்தட்ட நிறைவடைகிறது. இருப்பினும், வளரும்போது குழந்தையின் செயல்பாடுகளை அது செம்மைப்படுத்துகிறது. நீண்ட கால இயலாமைகளைத் தடுக்கக்கூடிய வகையில், சரியான நேரத்தில் செயல்பட, வளர்ச்சி தாமதங்களை முன்கூட்டியே கண்டறிதல் இன்றியமையாதது.

### தொடர்புடைய வலைப்பதிவு: குழந்தைகளைச் சாப்பிட வைப்பது எப்படி?

வளர்ச்சியைக் கண்காணித்தல்பெற்றோர்கள்தங்கள் குழந்தையின் வளர்ச்சியைக் கண்காணிப்பது அவசியம். நோய்த்தடுப்பு அட்டவணைகள் மற்றும் வளர்ச்சிக்கான மைல்கற்கள் இரண்டையும் உள்ளடக்கிய மருத்துவமனை கார்டு, குழந்தையின் முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், சாத்தியமான தாமதங்களை முன்கூட்டியே கண்டறியவும் உதவுகிறது. முறையான கண்காணிப்பே எந்தவொரு பிரச்னையும் சரியான மருத்துவ அல்லது வளர்ச்சித் தலையீடுகளுடன் உடனடியாகத் தீர்க்கப்படுவதை உறுதி செய்கிறது.





### கர்ப்பத்துக்கு முன்னும் கர்ப்பகால பராமரிப்பும்

குழந்தையின் ஆரோக்கியமும்வளர்ச்சியும் அது பிறப்பதற்கு முன்பே தொடங்குகிறது. தாய்க்கு சரியான ஊட்டச்சத்தும் மகப்பேறுக்கு முந்தைய பராமரிப்பும் கிடைப்பதை உறுதி செய்வது அவசியம். கருவின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு, குறிப்பாக நரம்புக் குழாய் குறைபாடுகளைத் தடுப்பதில் இரும்பு மற்றும் ஃபோலிக் அமில சப்ளிமெண்ட்ஸ் முக்கியமானவை. கர்ப்ப காலத்தில் தேவையற்ற மருந்துகளைத்தவிர்ப்பதும் ஒ-கதிர்களுக்கு ஆளாகாமல் இருப்பதும் சிக்கல்களைத் தடுக்க உதவும்.

### ஆரம்ப மாதங்களில்

குழந்தையின் வாழ்க்கையில் முதல் சில மாதங்கள் மிக முக்கியமானவை. பிறப்புக்கு முந்தைய முறையான பரிசோதனைகள் மற்றும் ரத்தசோகை, தைராய்டு குறைபாடுகள் போன்ற பிரச்னைகளை நிவர்த்தி செய்வது குழந்தையின் ஆரோக்கியத்தைக் காக்க உதவும். பிறந்த பிறகு, முதல் அரை மணி நேரத்துக்குள் தாய்ப்பால் கொடுக்க ஆரம்பித்து ஆறு மாதங்களுக்கு பிரத்யேகமாக தாய்ப்பால் கொடுப்பது மூளை வளர்ச்சிக்கு உதவுவதோடு, அத்தியாவசிய ஊட்டச்சத்துக்களையும் வழங்குகிறது.

### தொடர்புடைய வலைப்பதிவு: தாய்ப்பால் ஊட்டினால் மார்பகப் புற்றுநோயைத் தடுக்க முடியும்

பரிந்துரைக்கப்பட்ட அட்டவணையின்படி குழந்தைகளுக்கு தடுப்பூசி செலுத்திக் கொள்வது பல்வேறு நோய்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்கிறது. மூளைக்காய்ச்சல் மற்றும் மூளையழற்சி போன்ற சிக்கல்களுக்கு வழிவகுக்கும் நோய்த்தொற்றுகளைத் தடுக்க ஒவ்வொரு குழந்தைக்கும் முழுமையாக நோய்த்தடுப்பு வழங்கப்படுவதை உறுதி செய்ய முடியும்.

### வளர்ச்சி மைல்கற்கள்

சமூகப் புன்னகை, தலையைக் கட்டுப்படுத்துதல், உட்கார்தல், நடத்தல் போன்ற வளர்ச்சி மைல்கற்களைக் குழந்தைகள் அடைவதைப் பெற்றோர்கள் கவனித்து ஊக்குவிக்க வேண்டும். வண்ணமயமான பொருட்களைக் காட்டுவது, குழந்தையுடன் பேசுவது, விளையாடுவது போன்ற உணர்வு வளர்ச்சியைத் தூண்டும் செயல்பாடுகள் நன்மை பயக்கும்.

### வளர்ச்சி தாமதங்களை நிவர்த்தி செய்தல்

3, 6, 9, 18 மற்றும் 24 மாதங்களில் நரம்பியல் வளர்ச்சிப் பிரச்னைகளுக்கான ஸ்கிரீனிங் செய்யப்பட வேண்டும். தாமதங்களை முன்கூட்டியே கண்டறிவது சரியான நேரத்தில் அதை ஆரம்பத்திலேயே சரிசெய்ய உதவுகிறது. அதிக ஆபத்துள்ள குழந்தைகளுக்கு வழக்கமான நரம்பியல் வளர்ச்சி பின்தொடர்தல் அவசியம். குழந்தை மருத்துவர்கள் பல்வேறு கருவிகள் மற்றும் விளக்கப்படங்களைப் பயன்படுத்தி முன்னேற்றத்தைக் கண்காணிக்கவும், தேவைப்படும்போது பொருத்தமான சிகிச்சைகளை பரிந்துரைக்கவும் செய்வார்கள்.

### தூண்டும் சூழலை உருவாக்குதல்

ஆரம்பகால தூண்டுதல் மூளை வளர்ச்சிக்கு முக்கியமானது. ஐம்புலன்களிலும் குழந்தையை ஈடுபடுத்துவது இதில் அடங்கும். பெற்றோர் தங்கள் குழந்தையுடன் நன்கு பழக வேண்டும், கண் தொடர்பு, பேசுதல், பாடுதல் உள்பட பலவிதமான அமைப்புகளையும் சுவைகளையும் வழங்க வேண்டும். வீட்டில் வயதுக்கு ஏற்ற பொம்மைகள் மற்றும் செயல்பாடுகளுடன் கூடிய ஒரு தூண்டுதல் சூழலை உருவாக்குவது அறிவாற்றல்

(7ஆம் பக்கம் பார்க்க..)

**குழந்தையின் முதல் ஐந்து ஆண்டுகளில் மூளை வேகமாக வளர்ச்சியடைகிறது. சுமார் இரண்டு வயதில் இந்த வளர்ச்சி உச்சத்தை அடைகிறது. எதிர்கால அறிவாற்றல், உணர்வுகள் மற்றும் சமூக வளர்ச்சிக்கான அடித்தளத்தை அமைப்பதால் இந்தக் காலம் முக்கியமானது. ஐந்து வயதுக்குள் மூளையின் வளர்ச்சி கிட்டத்தட்ட நிறைவடைகிறது. இருப்பினும், வளரும்போது குழந்தையின் செயல்பாடுகளை அது செம்மைப்படுத்துகிறது.**

# ஈரானிடம் எண்ணெய் கொள்முதல் இந்திய நிறுவனம் உள்பட 17 நிறுவனங்களுக்கு தடை



ஈரானிடம் இருந்து எண்ணெய் கொள்முதல் செய்ய இந்திய நிறுவனம் உள்பட 17 நிறுவனங்களுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது.

மேற்கு ஆசிய நாடான ஈரான், 2015ல் அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகளுடன் ஒரு அணுசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. 2018ல் அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவியேற்ற பிறகு, அந்த ஒப்பந்தத்தில் இருந்து விலகினார். அதன்பிறகு, ஒப்பந்தத்தை மீறும் வகையில் ஈரான் யுரேனியம் செறிவூட்டலை அதிகரித்தது. எனவே, ஈரான் மீண்டும் ஒப்பந்தத்தை மேற்கொள்ளுமாறு அமெரிக்க அதிபர் டிரம்ப் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகிறார்.

இந்த நிலையில், ஈரானிடம் இருந்து எண்ணெய் கொள்முதல் செய்ய இந்திய நிறுவனம் உள்பட 17 நிறுவனங்களுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது. இது தொடர்பாக அமெரிக்க அரசு நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஈரானுடன் சட்டவிரோத பெட்ரோலிய கொள்முதலில் ஈடுபட்டு வந்த இந்திய நிறுவனம் உள்பட 17 நிறுவனங்களுக்கு தடை விதிக்கப்படுகிறது. இந்த எண்ணெய் கொள்முதல் மூலம், ஈரானின் அணுசக்தி திட்டங்களுக்கு மறைமுக நிதியுதவி வழங்கப்படுகிறது. எனவே, அதனை தடுக்கும் விதமாக இந்தத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஈரானிடம் எண்ணெய் கொள்முதல் செய்யும் நிறுவனங்களுக்கு எதிரான நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும், என தெரிவித்துள்ளது. இந்தியாவைச் சேர்ந்த டிஆர்6 பெட்ரோ இந்தியா எல்எல்பி என்ற பெட்ரோலியப் பொருட்கள் வர்த்தக நிறுவனம் அமெரிக்க தடைப் பட்டியலில் இடம் பெற்றுள்ளது. அக்டோபர் 2024 முதல் ஜூன் 2025 வரை, ஈரானில் இருந்து சுமார் ரூ.80 கோடி அளவிலான தாரை இந்நிறுவனம் இறக்குமதி செய்துள்ளது. (ஐ)

# வியட்நாமில் புரட்டி போட்ட கனமழை வெள்ளத்தில் சிக்கி 41 பேர் பரிதாப பலி



மத்திய வியட்நாமில் மழை வெள்ளத்தில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 52 ஆயிரம் வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின.

தென்கிழக்கு ஆசிய நாடான வியட்நாமின், மத்திய நகரமான ஹியூவில் அதிக மழை கொட்டி தீர்த்தது. இது வியட்நாமில் இதுவரை பதிவான அதிகபட்ச மழைப்பொழிவு என்று அந்நாட்டின் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. விடாமல் பெய்து வரும் கனமழையால் கடுமையான வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் ஏற்பட்டதில் 41 பேர் உயிரிழந்தனர். வியட்நாமின் ஆறு மாகாணங்களில் உயிரிழப்புகள் ஏற்பட்டு உள்ளது.

மேலும் காணாமல் போன ஒன்பது பேரைத் தேடும் பணிகள் நடந்து வருகிறது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. வெள்ளத்தில் மூழ்கிய வீடுகளில் சிக்கியுள்ள மக்களை மீட்கும் பணிகள் முழுவீச்சில் நடந்து வருகிறது. கடந்த மூன்று நாட்களாக, பல பகுதிகளில் மழை 150 செ.மீட்டரைத் தாண்டியுள்ளது.

52,000 க்கும் மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதியில் இருந்து 62 ஆயிரம் பேர் வெளியேற்றப்பட்டுள்ளனர். பல சாலைகளில் ஏற்பட்ட நிலச்சரிவுகளால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு உள்ளது. மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் மக்கள் கடும் சிரமம் அடைந்தனர். (ஐ)




# மிஸ் யுனிவர்ஸ் போட்டி மெக்சிகோ அழகி பாத்திமாவுக்கு மகுடம்!

இந்தாண்டுக்கான மிஸ் யுனிவர்ஸ் அழகியாக மெக்சிகோ நாட்டை சேர்ந்த பாத்திமா போஷ், 25, தேர்வு செய்யப்பட்டார்.

'மிஸ் யுனிவர்ஸ்' என்பது சர்வதேச நாடுகளை சேர்ந்த அழகிகள் கலந்து கொள்ளும் வருடாந்திர போட்டியாகும். இந்தாண்டுக்கான போட்டி, தாய்லாந்தில் உள்ள இம்பாக்ட் சேலஞ்சர் ஹாலில் நடந்தது. இந்தியா சார்பில் மணிகா விஸ்வகர்மா போட்டியிட்டார். 100க்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த அழகிகள் போட்டியில் கலந்து கொண்டனர்.

போட்டியின் இறுதி சுற்றில், மெக்சிகோ நாட்டை சேர்ந்த பாத்திமா போஷ் வெற்றி பெற்று, 2025ம் ஆண்டு மிஸ் யுனிவர்ஸ் பட்டத்தை தட்டி சென்றார். முதல் ரன்னர் அப் ஆக தாய்லாந்து அழகியும், இரண்டாம் ரன்னர் அப் ஆக வெனிசுலா அழகியும் தேர்வு செய்யப்பட்டனர்.

வெற்றி பெற்ற பாத்திமா, நடனம் ஆடி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார். இவருக்கு பல்வேறு தரப்பினர் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து வருகின்றனர்.


இறுதிப்போட்டியின் நடுவர்களில் ஒருவராக பேட்மின்டன் வீராங்கனை சாய்னா நேவால் பணியாற்றினார். இந்தியா சார்பில் போட்டியிட்ட மணிகா விஸ்வகர்மாவால் முதல் 12 இடங்களுக்கு வரமுடியவில்லை. அவர் முன்னதாக நடந்த ஸ்விம் சூட் போட்டியில் தோல்வியை தழுவி வெளியேறினார். (ஐ)

# துருக்கி பயங்கரவாதிகளை சந்தித்த டில்லி தாக்குதல் குற்றவாளி விசாரணையில் பகீர் தகவல்

டில்லியில் தற்கொலைப்படை தாக்குதலை நடத்திய உமர் நபி, துருக்கியில் 20 நாட்கள் தங்கியிருந்து பயங்கரவாத அமைப்பினரை சந்தித்து பேசியது விசாரணையில் தெரிய வந்துள்ளது.

டில்லி செங்கோட்டை அருகே கடந்த 10ம் தேதி நடத்தப்பட்ட தற்கொலைப்படை தாக்குதலில் 15 பேர் கொல்லப்பட்டனர். 20க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக என்.ஐ.ஏ., எனப்படும் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் விசாரணை நடத்தி வரும் நிலையில், அவ்வப்போது புதுப்புது தகவல்கள் வெளியாகி வருகின்றன.

அந்த வகையில், பயங்கரவாதி உமர் நபி குறித்து புது தகவல் கிடைத்துள்ளது. இது குறித்து உளவு அமைப்பு கூறியிருப்பதாவது கடந்த 2022ம் ஆண்டு உமர் நபி துருக்கி சென்று, அங்குள்ள பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களை சந்தித்து பேசியுள்ளான். இந்தப் பயணத்தின் போது உமருடன், முஷாம்மில் ஷாகீல் கனாய் மற்றும் முஷாபர் ராதர் (கைது செய்யப்பட்ட அதீல் அகமது ராதரின் சகோதரர்) ஆகியோரும் சென்றுள்ளனர். இந்த சந்திப்பை பாகிஸ்தானைச் சேர்ந்த பயங்கரவாதி உகாஷா ஏற்பாடு செய்து கொடுத்துள்ளதாக தெரிகிறது.



இவர்கள் மூவரும் சுமார் 20 நாட்கள் துருக்கியில் தங்கியுள்ளனர். ஆப்கன் - பாகிஸ்தான் எல்லையில் பதுங்கியிருக்கும் உகாஷாவை சந்திக்க அவர்கள் திட்டமிட்டிருந்தாலும், உகாஷாவின் அறிவுறுத்தலின் பேரில் சிரியா நாட்டவரை சந்தித்துள்ளனர். முஷாபர் ராதர், யுஏஇ வழியாக ஆப்கன் சென்று அல் கொய்தாவில் இணைந்துள்ளான்.

உமர் ஆப்கானிஸ்தானில் இருந்து துருக்கி செல்ல திட்டமிட்டிருந்தான். ஆனால், உடனடியாக இந்தியாவுக்கு திரும்பி தாக்குதலை முன்னெடுக்குமாறு உகாஷா உத்தரவிட்டதாக தகவல்கள் கூறுகின்றன. அதன்பிறகே, இந்தியாவுக்கு திரும்பிய உமர், அல் பலாஹ் பல்கலையில் பணியில் சேர்ந்து தாக்குதலுக்கான வேலையை செய்து வந்துள்ளான். முஷாம்மில், அதீல் மற்றும் உமர் நபி ஆகியே மூவரும் பாகிஸ்தானைச் சேர்ந்த பைசல், ஹசிம் மற்றும் உகாஷா ஆகியோருடன் டெலிகிராம் மூலமாக தொடர்பில் இருந்து வந்துள்ளனர். இவர்களிடம் இருந்த வெடிகுண்டு தயாரிக்கும் வீடியோ மற்றும் உத்தரவுகளைப் பெற்று பயங்கரவாத தாக்குதலுக்கு தங்களை தயார்படுத்தி வந்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட 3 டாக்டர்கள் மற்றும் ஷோபியான் மதகுரு முப்தி இர்பான் ஆகியோர், இந்தியா முழுவதும் இதுபோன்ற தாக்குதலை நடத்த திட்டமிட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களுக்கு சர்வதேச பயங்கரவாத நெட்வொர்க்குடன் இருக்கும் தொடர்புகளை அறிய, அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர், இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நுகேகொட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“தலைவர்களை உருவாக்குவதற்குரிய கூட்டம் அல்ல நுகேகொடை பேரணி. நேரம் வரும்போது நாம் அடுத்த ஜனாதிபதியை ஒன்றிணைந்து தெரிவுசெய்வோம்.

இன்றைய கூட்டத்துக்குரிய ஒலிபெருக்கிகள் கழற்றப்பட்டுள்ளன. பரவாயில்லை, சிறைச்சாலையும் சென்றுவிட்டோம். எனவே, அரசின் அச்சுறுத்தல்களுக்கு நாம் அடிபணியப் போவதில்லை.

நாட்டில் பல பிரச்சினைகள் இருக்கும்போது நாமலின் பட்டப்படிப்பு பற்றி பேசுவதற்கு முன்னுரிமை வழங்கும் நிலைக்கு அரசு வந்துவிட்டது. நாமலின் பட்டப்படிப்பு பற்றி தேடுவதற்கு முன்னர் ஆட்சியாளர்கள் தமது கல்வித் தகைமைகளை வெளிப்படுத்த வேண்டும்.” - என்றார்.

அதேவேளை, தனது உரையின்போது நாமல் ராஜபக்ஷவை சாமர எம்.பி. புகழ்ந்து பேசி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சஜித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிரான பேரணியில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

அத்துடன், கட்சிகள் பங்கேற்காவிட்டாலும் ஆதரவாளர்கள் ஒன்றிணைந்து விட்டனர். எனவே, ஐக்கிய மக்கள் சக்தியும் இனி வரும் என்று உதய கம்மன்பில தமதுரையின்போது குறிப்பிட்டார்.

## மாவீரர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உரித்தாளிகளுக்கு மதிப்பளித்து கௌரவம் வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. ஊர்காவற்றுறை பிரதேச சபையின் பொது விளையாட்டரங்கின் திறந்தவெளி அரங்கில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அஞ்சலிகளைச் செலுத்தினார். 2026ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்துக்கான நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதற்கென தற்போது ரவிகரன் எம்.பி. கொழும்பில் தங்கியுள்ள நிலையில், இலங்கைத் தலைநகர் கொழும்பிலேயே அவரால் இவ்வாறு மாவீரர்களுக்கு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழில் குடும்பஸ்தர் அடித்துக் கொலை!

யாழ்ப்பாணம், நவ. 21

யாழ்ப்பாணத்தில் குடும்பஸ்தர் ஒருவர் கள்ளுத தவறணையில் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை புன்னாலைக்கட்டுவனில் உள்ள கள்ளுத்தவறனை ஒன்றில் கள்ளு அருந்துவதற்குச் சென்ற நிலையில் தவறணையில் கள்ளு அருந்திக் கொண்டிருந்த இளைஞர்கள் இருவர் மேற்படி குடும்பஸ்தரைத் தாறுமாறாகத் தாக்கியுள்ளனர்.

இதனால் படுகாயமடைந்த குடும்பஸ்தர் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 56 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையாவார். இந்தச்சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# அர்ச்சுனா எம்.பிக்குக் கொலை மிரட்டல்!

கொழும்பு, நவ. 21

தேசிய மக்கள் சக்தியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசல், தனக்கு கொலை மிரட்டல் விடுத்தார் என்று யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா, சபாநாயகரிடம் இன்று முறையிட்டார். நாடாளுமன்றத்தில் இன்று ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பியே இந்த விடயத்தை அர்ச்சுனா சுட்டிக்காட்டி இருந்தார்.

“சபாநாயகரே, புத்தளம் மாவட்ட வைத்தியசாலை தொடர்பில் இன்று காலை சபையில் கேள்வி எழுப்பி இருந்தேன். எனது கேள்விகள் முடிவடைந்த பின்னர் சிற்றுண்டிச்சாலைக்குச் சென்றேன். அங்கு வைத்து புத்தளம் மாவட்ட எம்.பி. பைசல் என்னைக் கொலை செய்வதாக அச்சுறுத்தல் விடுத்தார். என்னைப் புத்தளத்துக்கு வர வேண்டாம் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்தார். சி.சி.ரி.வி. கமரா இருந்தது. அதில் இது பதிவாகி இருக்கும். எனவே, உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எனக்குச் சாவதற்குப் பயம் இல்லை. ஆனால் மிரட்டல்களுக்கு அடிபணிய முடியாது.” - என்றார்.

எனினும், தான் எவரையும் மிரட்டவில்லை எனவும், அர்ச்சுனா எம்.பி. பொய்யுரைக்கின்றார் எனவும் ஆளுங்கட்சி எம்.பியான பைசல் தெரிவித்தார்.

# மாவீரர் வாரத்தை முன்னிட்டு குருதிக்கொடை





யாழ்ப்பாணம் வடமராட்சி சுப்பர்மடம் பகுதியில் மாவீரர் வாரத்தை முன்னிட்டு குருதிக்கொடை அளிக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (21) காலை 9:00 மணியளவில் சுப்பர் மடம் பொது மண்டபத்தில் இடம் பெற்றது. குருதியினை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை குருதி வங்கி பிரிவினர் பெற்றுக்கொண்டனர். இதேவேளை மாவீரர் வாரத்தின் தொடக்க நாளான வெள்ளிக்கிழமை (21) அன்று மாவீரர் நினைவேந்தல் கொட்டகை அமைக்கப்பட்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளும் இடம் பெற்றது. இதில் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன. இதில் பருத்தித்துறை நகரசபை சபை தவிசாளர் வின்சன் டீ போல் டக்ளஸ் போல், மற்றும் கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டு சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தினர். (ஐ)

# துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பித்த அனைவருக்கும் நேர்முகத் தேர்வு




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்காக கோரப்பட்ட விளம்பரத்தின் அடிப்படையில் விண்ணப்பித்துள்ள அனைத்து விண்ணப்பதாரிகளையும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கும் படி, யாழ். பல்கலைக்கழக பதிவாளருக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது.

கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் இருவரது விண்ணப்பங்கள் தொடர்பில் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் ஒருவர் சந்தேகம் எழுப்பியதால், இருவரது விண்ணப்பங்களையும் ஏற்றுக் கொள்வது தொடர்பில் பல்கலைக்கழகப் பதிவாளரால் மானியங்கள் ஆணைக்குழுவின் தெளிவுபடுத்தலுக்காக அனுப்பப்பட்டிருந்தது.

அதன் படி, அந்த இருவரையும் துணைவேந்தர் தெரிவுக்கான நேர்முகத் தேர்வுக்கு அழைக்குமாறு மானியங்கள் ஆணைக்குழு அறிவுறுத்தியுள்ளது. இது தொடர்பான அறிவித்தல் மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கபில செனிவிரத்னவினால் வெள்ளிக்கிழமை (21) மாலை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் நான்கு பீடாதிபதிகள், இரண்டு முன்னாள் பீடாதிபதிகள் மற்றும் வெளிவாரி விண்ணப்பதாரி ஒருவர் உட்படத் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்த ஏழு பேருக்குமான நேர்முகத் தேர்வு எதிர்வரும் டிசெம்பர் 7ஆம் திகதி நடைபெற உள்ள விசேட பேரவைக் கூட்டத்தில் இடம்பெறவுள்ளது.

தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜாவின் பதவிக்காலம் அடுத்த வருடம் மார்ச் மாதம் 24 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

இந் நிலையில், துணைவேந்தர் தெரிவுக்கான மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் பல்கலைக்கழக பேரவை செயலாளரினால் கடந்த செப்டம்பர் மாதம் முதலாம் திகதி துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது.

கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்கள் அனைத்தும் கடந்த மாதம் நடைபெற்ற பல்கலைக்கழக பேரவையின் மாதாந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டதுடன், சுற்றறிக்கைக்கு அமைவாக புள்ளிகளை வழங்குவதற்கான விசேட பேரவைக் கூட்டத்தை எதிர்வரும் டிசெம்பர் 7ஆம் திகதி நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு இருந்தது.

இதனிடையே விண்ணப்பித்திருந்த பேராசிரியர் ஒருவர் சுற்றறிக்கை நியமங்களை பூர்த்தி செய்துள்ளாரா? என்பது தொடர்பிலும், வெளியிலிருந்து விண்ணப்பித்த மற்றொருவர் போதிய ஆதாரங்களை இணைக்கத் தவறியமை தொடர்பிலும் எழுந்த ஐயப்பாடுகளை அடுத்து அது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஆலோசனை கோரப்பட்டிருந்தது. அதை ஆராய்ந்த மானியங்கள் ஆணைக்குழு இருவரது விண்ணப்பங்களும் நியமங்களை பூர்த்தி செய்துள்ளதாகவும், இருவரையும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்குமாறும் வழிகாட்டுதலை வழங்கியுள்ளது. (ஐ)

# புத்திசாலி குழந்தையை...

மற்றும் மோட்டார் திறன்களை மேம்படுத்துகிறது.

### நல்ல மதிப்புகளை வளர்ப்பது எப்படி?

பெற்றோரைப் பார்த்தே பிள்ளைகள் கற்றுக் கொள்கிறார்கள். தினசரி தொடர்புகளில் நேர்மை, கனிவு, மரியாதை போன்ற மதிப்புகளை நாம் வெளிப்படுத்துவதே குழந்தைகளுக்கு அவர்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கிறோம் என்பதைக் கற்றுக்கொடுக்கிறது. நிலையான, நேர்மறையான முன்மாதிரி மதிப்புகளை திறம்பட வளர்க்க உதவுகிறது.

### ஒழுக்கம் மற்றும் வழிகாட்டுதல்

பொய் சொல்வது மற்றும் சண்டையிடுவது போன்ற ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தைகளில் உறுதியாக இருப்பது முக்கியம் என்றாலும், குழந்தைகளை மென்மையாகவும் ஆக்கபூர்வமாகவும் வழிநடத்துவதும் சமமாக முக்கியமானது. குழந்தைகளை மன்னிப்பு கேட்கவும் அவர்களின் தவறுகளிலிருந்து கற்றுக்கொள்ளவும் ஊக்குவிப்பது பொறுப்புணர்வை வளர்க்கிறது.

### தரமான நேரம் மற்றும் செயல்பாடுகள்

கதைசொல்லல், பாரம்பரிய விளையாட்டுகளை விளையாடுதல், படைப்புக் கலைகளில் ஈடுபடுதல் போன்ற செயல்பாடுகள் மூலம் குழந்தைகளுடன் தரமான நேரத்தைச் செலவிடுவது அவர்களின் அறிவாற்றல் மற்றும் சமூகத் திறன்களை வளர்க்க உதவுகிறது. வெளிப்புற விளையாட்டு மற்றும் உடல் செயல்பாடுகளை ஊக்குவிப்பது ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் அளிக்கிறது.

### சிறப்பு சந்தர்ப்பங்களைக் கொண்டாடுதல்

குழந்தைகளின் பிறந்தநாளில் ஆதரவற்றோர் இல்லங்கள் அல்லது முதியோர் இல்லங்களுக்குச் செல்வது போன்ற சமூக சேவை நடவடிக்கைகளில் குழந்தைகளை ஈடுபடுத்துவது, அவர்களுக்குக் கொடுப்பதிலும் பகிர்ந்து கொள்வதிலும் உள்ள மகிழ்ச்சியைக் கற்றுக்கொடுக்கிறது. இது சிறு வயதிலிருந்தே சமூகப் பொறுப்புணர்வு மற்றும் கனிவை வளர்க்க உதவுகிறது.

நல்மதிப்புகளுடன் புத்திசாலித்தனமான மற்றும் திறமையான குழந்தையை வளர்ப்பது என்பது ஒரு பன்முக முயற்சியாகும்.

இதற்கு பெற்றோரின் அர்ப்பணிப்பும் ஈடுபாடும் தேவைப்படுகிறது. ஆரம்பகால வளர்ச்சியில் கவனம் செலுத்துவதன் மூலமும், ஒரு தூண்டுதல் சூழலை வழங்குவதன் மூலமும், சரியான ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்தை உறுதிசெய்தல் மற்றும் நேர்மறையான நடத்தைகளை மாதிரியாக்குவதன் மூலமும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வெற்றி மற்றும் நிறைவுக்கான பாதையில் அழைத்துச் செல்ல முடியும்.

சரியான வழிகாட்டுதல் மற்றும் ஆதரவுடன், ஒவ்வொரு குழந்தையும் சமூகத்துக்கு நேர்மறையாகப் பங்களிக்கும் ஒரு நல்ல நபராக வளர முடியும்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.11.2025 வெளியிடப்பெற்றது.